1972 டிசம்பர் 15]

கல்வித் தொடர்பற்ற பணி.

திரு. எல். பலராமன் : (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கல்வித் தொடர்பற்ற பணியைச் செய்யுமாறு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கோரப்படுகின்றனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Special Pay to the Headmasters of Elementary Schools.

*120 *Q.*—Thiru K. S. GANAPATHY (on behalf of Thiru S. MUTHUSWAMY) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether there is any proposal with the Government to grant Special Pay to the Headmasters of Elementary Schools ; and

(*b*) if so, the date from which it will be granted ?

தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தனிச் சம்பளம்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தனிச் சம்பளத் திட்டத்தை தமிழ்நாடு அரசு வழங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆமெனில். எப்போது முதல் வழங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.